மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், கோவில்பட்டி

அ.வ.எண்.204 /2018

பிரதிவாதி தரப்பு சாட்சி வாக்குமூலம் பி.வா.சா.1.

---

பெயர். - திரு.சாமிராஜ்

த/பெ. - திரு.ஊர்காவலன்

கிராமம் - கோவில்பட்டி

தொழில் - பணி ஓய்வு

தாலுகா - கோவில்பட்டி

வயது - 62.

1872-ஆம் ஆண்டு இந்திய சாட்சிய சட்டத்தின்படி 2025-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 15-ஆம் நாள் இந்நீதிமன்ற உதவியாளரால் சத்தியப்பிரமாண வாக்குமூலம் செய்யப்பட்டு, நிருபண வாக்குமூலம் தாக்கல் செய்யப்பட்டு, ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

முதல் விசாரணை.-

1) நான் இந்த வழக்கில் 2ம் பிரதிவாதியின் கணவர் ஆவேன். பிரதிவாதிகளுக்காக எனது தரப்பு சாட்சியத்தை நிருபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும். அதை பிரதிவாதிகள் தரப்பில் ஏற்றுக்கொள்ள வேண்டுகிறேன்.

| | |
|---|---|
| 1 | 23.06.1982 ல் சங்கப்பதிவேட்டிலிருந்து சங்கம் நீக்கம் செய்யப்பட்டு விட்டது என்பதற்கு திருநெல்வேலி மாவட்ட பதிவாளர் வழங்கிய சான்று சான்றிட்ட நகல் பி.வா.சா.2 ஆ.ஆக குறியீடு செய்யப்படுகிறது. |
| 2 | 06.08.1969 ல் சுப்பன் மகன் லெட்சுமணன் சங்கத்திற்கு பதிவு செய்து கொடுத்த பட்டா பாத்திய விடுதலைப்பத்திரம் பி.வா.சா.3 ஆ.ஆக குறியீடு செய்யப்படுகிறது. |
| 3 | 06.02.1995 ல் லெட்சுமணன் மகன் செல்லையா சங்கச்சொத்துக்களை பராமிக்க கிரையம் செய்து கொடுக்க அடமானம் ஒத்தி போன்ற வில்லங்கம் செய்ய பொறுப்பாளர்களை முகவராக நியமித்து பதிவுசெய்துகொடுத்த பொது வக்காலத்து ஆவணம் அசல் பி.வா.சா.4 ஆ.ஆக குறியீடு செய்யப்படுகிறது. |
| 4 | 21.04.1995 ல் தெற்கு மயிலோடை சத்தியநாதன் மகன் செல்வராஜ் மற்றும் மூவருக்கும் சங்கச்சொத்தை விற்பனை செய்ய முன்பணம் ரூ.55000/- பெற்றுக்கொண்டதற்கு எழுதிக்கொடுத்த அக்ரிமெண்ட்அசல் பி.வா.சா.5 ஆ.ஆக குறியீடு செய்யப்படுகிறது. |
| 5 | 16.12.2006 ல் வேப்பங்குளம் ஜவஹகர் விவசாயச்சங்கக்கூட்டம் காரியதரிசி இ.மாடசாமி தலைமையில் நடந்த கூட்டத்தில் இறந்த நபர்களுக்கு பதில் அவர்களின் வீடுகளில் ஒருவரை உறுப்பினர்களாக சேர்க்க தீர்மானம் நிறைவேற்றி சேர்க்கப்பட்ட விபரத்திறக்கான தீர்மானம் அசல் பி.வா.சா.6 ஆ.ஆக குறியீடு செய்யப்படுகிறது. |
| 6 | 16.01.2007 ம்தேதிய ஜவர் விவசாய சங்கத்தின் பொறுப்பாளர்கள்,உறுப்பினர்கள் அடங்கிய 29 பெயர் கொண்ட உறுப்பினர் பட்டியல் அசல் பி.வா.சா.7 ஆ.ஆக குறியீடு செய்யப்படுகிறது. |

| | |
|---|---|
| 7 | 16.01.2007 ம்தேதி இ.மாடசாமி தாரியதரிசி முன்னிலையில் நடந்த மகாசபை கூட்டத்தில் புதிய பொறுப்பாளர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டதற்கான தீர்மான நகல் அசல் பி.வா.சா.8 ஆ.ஆக குறியீடு செய்யப்படுகிறது. |
| 8 | 29.07.2007 ல் மகாசபையின் தலைவர் எட்டுராஜ் தலைமையில் நடந்த கூட்டத்தில் சங்க நிலத்தை விற்பனை செய்ய நிறைவேற்றப்பட்ட தீர்மானம் அசல் பி.வா.சா.9 ஆ.ஆக குறியீடு செய்யப்படுகிறது. |
| 9 | 27.09.2007 ல் தலைவர் எட்டுராஜ் தலைமையில் நடந்த மகாசபை கூட்டத்தில் பிரதிவாதிகளுக்கு சங்க சொத்துக்களை கூட்டுக்கிரையம் செய்ய ஒப்புக்கொண்ட தீர்மானம் நிறைவேற்றப்பட்டது பி.வா.சா.10 ஆ.ஆக குறியீடு செய்யப்படுகிறது. |
| 10 | 09.10.2007 ல் எட்டுராஜ் தலைமையில் நடத் மகா சப்ை கூட்டத்தில் 1,2 பிரதிவாதிகளிடம் கிரையத்தொகையை முழுமையும் பெற்று உறுப்பினர்களுக்கு விகிதாச்சாரப்படி பிரித்து வழங்கப்பட்டது குறித்தும்,மகாசபை கூட்டங்களில் நிறைவேற்றப்பட்ட பி.வா.சா.ஆ.6 முதல் பி.வா.சா.ஆ.11 வரையிலான ஆவணங்களை சார்பதிவாளர் அலுவலகத்தில் சமர்ப்பிக்க ஒப்புக்கொள்ளப்பட்ட நிறைவேற்றப்பட்ட தீர்மான நகல் பி.வா.சா.11 ஆ.ஆக குறியீடு செய்யப்படுகிறது. |
| 11 | 19.10.2007 ல் சங்கத்தின் செயல்பாடுகள் அனைத்தும் முடிவுக்கு கொண்டு வரப்பட்டு சங்கம் கலைக்கப்பட்டு விட்டதற்க்கான நிறைவேற்றப்பட்ட தீர்மானம் பி.வா.சா.12 ஆக குறியீடு செய்யப்படுகிறது. |
| 12 | 07.08.2024 ல் 1,2 பிரதிவாதிகளின் பெயரில் வழங்கப்பட்ட இணைவழி கூட்டுப்பட்டா 3 எண்ணம் பி.வா.சா.13 ஆ.ஆக குறியீடு செய்யப்படுகிறது. |
| 13 | 07.08.2024 ல் புஞ்சை நிலத்திற்குச் செலுத்தியதற்கான நிலத்தீர்வை எண்ணம் 1 பி.வா.சா.14 ஆ.ஆக குறியீடு செய்யப்படுகிறது. |
| 14. | 22.11.2019 தேதியில் பி.சா.1-ன் தந்தையின் இறப்புச்சான்றிதழ் இணையவழி பதிவிறக்க நகல் பி.வா.சா.15 ஆ.ஆக குறியீடு செய்யப்படுகிறது. |
| 15 | 20.03.2023 ல் பி.சா.1-ன் தந்தையின் வாரீசு சான்றிதழ் இணையவழி பதிவிறக்க நகல் பி.வா.சா.16 ஆ.ஆக குறியீடு செய்யப்படுகிறது. |

(பி.வா.சா.ஆ.2 முதல் பி.சா.ஆ.12 வரையிலான ஆவணங்கள் வாதி தரப்பில் ஆட்சேபனைக்குட்பட்டு குறியீடு செய்யப்படுகிறது.

வாதியின் வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டுகிறேன்.

<u>குறுக்கு விசாரணை</u> - வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கிணங்க வேறுதேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்தை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு வாசித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒப்பம்)C.கருப்பசாமி,
வட்ட உரிமையியல் நீதிபதி,
கோவில்பட்டி,
15.04.2025.